நூல் 33

சைத்தலமாலை

துறைமங்கலம்
சிவப்பிரகாச சுவாமிகள்.

உ

சிவமயம்

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க.

கைத்தலமாலை.

ஒருவிகற்பவெதுகைக் கலிநிலைத்துறை.

முன்ன மாலய னிந்திர னமரர்கண் முனிவர்
பன்னு மாரணம் போற்றுதற் கரியநம் பரமன்
மின்னு லாவிய சடாடவிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 1

அன்ன மாயும்வெண் பிறைமருப் பேனமென் றுயு
முன்ன நான்முக னாரணன் றேடரு முதல்வன்
பின்னு வார்சடைப் பெருந்தகை பீடமாக் கோடற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 2

தன்னை மேவிவந் தனைபுரி பவன்செய றடுப்பா
னுன்னி மேல்வரும் வெந்திறற் கூற்றினை யுதைத்த
மன்னு மாலயற் கரியவன் வந்துவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 3

தன்னை நேர்வட காசிதென் கயிலைகே தார
மன்ன வார்வய லம்பல நமன்றமர் வராமற்
கன்னன் மாமதற் றெறும்விழிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 4

கன்ன லாரமு தினுஞ்சுவை தருவதாய்க் காண்பா
னுன்னு மாலயற் கரியதா மொருமலை யுச்சி
மன்னு மோர்பவப் பிணிமருந் தெளிதுவந் திருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 5

அன்னை யாகியின் னுயிர்க்குயி ராமரு ளாளன்
பொன்னு மாரமு மணியுமா ரமுதமும் போல்வான்
றன்னை நாடொறுங் கண்டுகண் களிப்பதாச் சார்தற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 6

அன்ன மூர்பவன் முதலியோ ரபயமென் றடைய
முன்ன மாலமுண் டவர்துயர் களைந்தருண் முதல்வன்
மின்னு மாமழு வலமுடை வீரன்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 7

பன்னு மாமறை தமிழினாற் பாடுநம் பிக்குப்
பொன்னு மாடையு மணிகளு மூர்தியும் பொருளு
மின்னு மீபவ னருளினன் மேவிவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 8

பின்னும் வார்திரைக் கடலின்வீழ்ந் தமிழ்கையிற் பிடிப்ப
முன்ன மோர்புணை யகப்படு முறைமைபோற் பிறப்பி
னின்னல் கூர்பொழு தெம்பிரான் வந்துவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 9

தன்னை யோர்பொழு திறைஞ்சுவான் கருதியித்தரைமேன்
மன்னு மாலயம் யாண்டுள தெனவல மராமற்
பொன்ன வாமலர்ச் சடையுடைப் புனிதன்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 10

கைத்தலமாலை முற்றிற்று.

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இஷ்டலிங்கவபிஷேகமாலையின்

குறிப்புரை

செய்யுள் (1) சிவலிங்கமே எவ்வகைமூர்த்திகளுக்கும் மூலமென்பது.

(2) ஆகமோற்பவவகைகளும், அவற்றில்விதிக்கப்படும் விதிமார்க்கம் பத்திமார்க்கம் இரண்டானும் முத்தியுண்டென்பதும் விளக்கியது. (3) நின்மலபஞ்சாவத்தையினியல்பும், சிவம் அவற்றிற்கும் அதீதப்பட்டதென்பதும் கூறியது.

(4) பெருமானுக்கு ஒன்றினும் விழைவில்லையாகவும் ஆன்மாக்களுய்வான் ஆகமங்களில் ஆராதனைவிதித்தது.

(5) பெருமான் அனுக்கிரக நிக்கிரகவியல்பு.

(6) வீரசாமானியருக்குத் தூலதனுவிற்செய்யப்படும் இஷ்டலிங்க எழுவகைத்தீக்கை.

(7) வீரவிசேடருக்குச் சூக்குமதனுவிற் செய்யப்படும் பிராணலிங்க எழுவகைத்தீக்கை.

(8) வீரநிராபாரருக்குக் காரணதனுவிற் செய்யப்படும் பாவலிங்க எழுவகைத்தீக்கை. (9) அபிஷேகங் கொள்ளுமுறைமை.

(10) சிவானந்தத்தினுயர்வும் சைவவருணெறிச் சிறப்பும்.

இஷ்டலிங்கவபிஷேகமாலையின் குறிப்புரை

முற்றிற்று.

நெடுங்கழிநெடிலின் குறிப்புரை

செய்யுள் (1) எப்பிறவி நல்லன்வென வினுதற்கணின்ற ஓகார மிரண்டனுள் முன்னையது அர்ச்சனைபுரிந்த சிலம்பியாதியவற்றி னுயர்பும், பின்னையது அதுபுரியாத மூடரினிழிபும் தோன்ற நின்றன. தெறித்தவர்தமையும் வைத்தருள்வோயென இயையும்.

(2) அமைத்து கடந்திடாது இயன்றயாக்கையெனக் கூட்டுக. இத்திறயாக்கையாதிய வுடையராய்த் தோழமைபூண்ட நம்பியாரூரர் முதலியோர் விரும்பியவாறுசெய்யத் தேவரீரே வலிந்துசெல்லுங்காலத்தும் அவர் அவ்வரியயாக்கையையும் வெறுத் துத் தேவரீரையேநண்ண; யான் இவ்விழிவுடல் நீக்கத்திற்கு அழி வேன்; இங்ஙனமாயின் எங்ஙனமுய்வேன் என்பது.

(3) ஐம்புலன் - ஈண்டு ஐம்பொறிகள்.

(4) உலகையளந்த திருமாலாதியர் நறுமலர்சாத்தலாதிய ஒவ்வொருதொண்டையே மேற்கொண்டொழுகாநிற்க; அவர்முன் நாணமின்றி இத்தொண்டனைத்தும் ஒருங்குடையதாகிய உமதுபூசை யைச் செய்கின்றேன் எனதறியாமை என்னே! என்பது. இறை வரையழிப்பான் யாகமியற்றிப் புலியாதியவிடுத்தமைபற்றித் தாருக வனமுனிவரை விலங்கினுங்கடையரென்றார்.

(5) மூக்கிடைவிழிகளேறல் -காட்சிமழுங்கக் கண்சுருங்கல்.

(7) சிவசாதாக்கியமுதலிய ஐந்துசாதாக்கிய தத்துவங் களையும் சதாசிவமூர்த்திமுதலிய ஐந்து தத்துவமூர்த்திகளையும் முறையே உற்றன ஈசானம் சத்தியோசாதம் வாமதேவம் அகோரம் தற்புருஷமென்னும் முகங்களாகிய பிரபாவங்கள் எனக் கொள்க.

(10) வங்கையராதியர்சரித்திரங்களை வசவபுராணத்துட் காண்க.

குறுங்கழிநெடிலின் குறிப்புரை

செய்யுள் (1) பொன்செய்வாணிகர் - பொன்வினைபுரியும் வாணிகர்-(தட்டார்) பொன் ஈட்டும் வணிகருமாம். என்செய்கு - யாதுசெய்வேனென்னும் தன்மையொருமை வினைமுற்று. ஓ - வினப்பொருட்டு. (2) விட்டிடுமாறு - கடைக்குறைந்தது. ஆறு - தன்மை.

(3) தமவென - தம்முடையனவென.

(6) குருபணிக்கு உடலும், சங்கமபூசைக்குப் பொருளும், சிவத்தியானத்திற்கு மனமும், உரியனவாகப்புரிதல் வேண்டுமென்னும் நூற்றுணிபுபற்றி நினக்குறுகூரும் மனமென்றார். இதனை நிரஞ்சனமாலை (17)வது செய்யுளினும்உணர்க.

(7) மலர்க்கருள்வதாயின் என்மலர் கல்லினுந்தீதோ என்பது. (8) தருநீர் உனக்கு வாய்ப்புனலாமோ என இயையும்.

நிரஞ்சனமாலையின் குறிப்புரை

செய்யுள் (29) கருவன்று - கருவன்றி. கரு - வித்து. * "விச்சதன்றியே விளைவுசெய்குவாய்" என்பதனானும் அறிக.

* திருவாசகம் திருச்சதகம். கருவென்று என்பதும்பாடம்.

கைத்தலமாலையின் குறிப்புரை

செய்யுள் (5) கன்னல்வானமு தென்பதும் பாடம்.

(6) அன்னைபாதியன், கண்களிப்பவே, என்பதும் பாடம்.

சிவநாம மகிமையின் குறிப்புரை

செய்யுள் (4) இறந்திடாது என்பது ஈறுகுறைந்தது.

(5-6) காணிய கூறிய என்பன செய்யியவென்னும் வினையெச்சம். (7) வெண்மதிசூடி - வினைக்குறிப்புப் பெயர்.

முற்றிற்று.